**ஒதுக்கீட்டுத் தலைப்பு 279 - கேகாலை மாவட்ட செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) சட்டரீதியான ஒழுங்கு விதிகளினூடாக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுதல்.

(ஆ) அரசாங்கத்தின் பிரதான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் (சமுர்த்தி மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்) அரசாங்க நியதிகள் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்கும் வகையில் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தல்.

(இ) மாவட்டத்தின் அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களினூடாக மக்களை வலுவூட்டுவதற்காக நிறைவேற்றப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் நிருவாக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குத் தேவையான ஒருங்கிணைத்தலும் வழிகாட்டலும்.

(ஈ) மாவட்டத்தில் அரசின் முகவராக செயற்படுதல்.

(உ) இயற்கை அழிவுகள் மற்றும் ஏனைய அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் முன்னின்று செயற்படுதல்.

## 2. மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) கேகாலை
(ஆ) மாவனெல்ல
(இ) அரநாயக்க
(ஈ) புலத்கொஹுபிட்டிய
(உ) ரம்புக்கனை
(ஊ) கலிகமுவ
(எ) வரக்காபொல
(ஏ) தெஹிஓவிட
(ஒ) ருவன்வெல்ல
(ஓ) யட்டியாந்தோட்டை
(ஔ) தரணியகல

## 1.3 கணக்காய்வும் கணக்காய்வின் நோக்கெல்லையும்

கேகாலை மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அறிக்கைகள் இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 05 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள்

இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு காண்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(I) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 628,772,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 602,494,316 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 26,277,684 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 4.18 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 350,525,000 | 581,522,000 | 15,330,478 | 2.64 |
| மூலதனம் | 47,250,000 | 47,250,000 | 10,947,206 | 23.17 |
| மொத்தம் | 397,775,000 | 628,772,000 | 26,277,684 | 4.18 |

**(II) ஏற்பாடுகளை குறைவாகப் பயன்படுத்தல்**

06 செலவின விடயங்களிற்கு மொத்தமாக ரூபா 1,551,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் மொத்தம் ரூபா 371,381 இனை பயன்படுத்தியதன் பின்னர் ஏற்பாட்டிலிருந்து ரூபா 1,179,619 சேமிப்பு அவதானிக்கப்பட்டது. அச்சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 20 முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் அமைந்திருந்தது. செலவின விடயங்களிற்காக மிகையான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தமையால் இச்சேமிப்பு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## (III) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்

பல்வேறு கருமங்களுக்காக ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங் களினால் பின்வருமாறு ரூபா 3,682,058,726 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவினத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான செலவு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 101 | புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு | 534,700 | 523,580 | 11,120 |
| 102 | நிதி திட்டமிடல் அமைச்சு | 108,000 | 76,462 | 31,538 |
| 103 | அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 373,853 | 342,577 | 31,276 |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2,206,036,568 | 1,915,359,904 | 290,676,664 |
| 106 | இடர் முகாமைத்துவ அமைச்சு | 3,056,499 | 1,374,733 | 1,681,766 |
| 110 | நீதி அமைச்சு | 2,479,703 | 2,338,948 | 140,755 |
| 117 | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 140,000 | 130,975 | 9,025 |
| 118 | விவசாய அமைச்சு | 2,467,000 | 1,502,882 | 964,118 |
| 120 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு | 13,291,483 | 11,392,104 | 1,899,379 |
| 121 | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 10,357,183 | 10,172,714 | 184,469 |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 15,505,631 | 15,070,422 | 435,209 |

| | | | | |
|---|---|---|---|---|
| 133 | தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிகள் அமைச்சு | 6,344,534 | 5,750,407 | 594,127 |
| 134 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 171,000 | 163,384 | 7,616 |
| 153 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 4,749,112 | 4,671,947 | 77,165 |
| 156 | இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சு | 1,562,700 | 1,392,018 | 170,682 |
| 160 | சுற்றாடல் அமைச்சு | 25,000 | 25,000 | - |
| 173 | அரசாங்க முகாமைத்து மறுசீரமைப்பு அமைச்சு | 667,850 | 579,500 | 88,350 |
| 177 | கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு | 1,358,424 | 1,349,253 | 9,171 |
| 179 | கமநல சேவைகள் வனசீவராசிகள் அமைச்சு | 90,000 | 67,765 | 22,235 |
| 201 | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 10,132,667 | 9,366,956 | 765,711 |
| 206 | கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | 298,000 | 290,295 | 7,705 |
| 210 | தகவல் திணைக்களம் | 8,000 | 8,000 | - |
| 216 | சமூக சேவைத் திணைக்களம் | 8,086,321 | 6,659,077 | 1,427,244 |
| 217 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களம் | 6,925,210 | 6,635,471 | 289,739 |
| 218 | சமூர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 698,178,865 | 550,167,059 | 148,011,806 |
| 219 | விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம் | 1,434,245 | 1,234,728 | 199,517 |
| 226 | குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் | 4,575 | 3,255 | 1,320 |
| 252 | குடிசனமதிப்பு மற்றும் தொகைமதிப்புத் திணைக்களம் | 23,149,069 | 22,196,918 | 952,151 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 654,363,000 | 645,139,524 | 9,223,476 |

| | | | | |
|---|---|---|---|---|
| 254 | பதிவாளர் நாயகத் திணைக்களம் | 224,777 | 224,046 | 731 |
| 289 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 655,267 | 591,919 | 63,348 |
| 307 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம். | 1,496,854 | 1,406,956 | 89,898 |
| 327 | காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம் | 6,693,907 | 5,898,512 | 795,395 |
| 328 | மனித வலு தொழில்வாய்ப்பு திணைக்களம் | 1,088,729 | 1,027,728 | 61,001 |
| | | ---------------- | ----------------- | --------------- |
| | மொத்தம் | 3,682,058,726 | 3,223,135,019 | 458,923,707 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் படி கேள்வி மனுக்களை கோராதும் தொழலிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை இன்றியும் கண்டி மாவட்டச் செயலகத்தின் கொள்வனவுச் சபைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 3,306,250 பெறுமதியுள்ள ‘‘டெல்‘‘ வகையான 38 மேசைக் கணனிகள் மற்றும் ‘‘புரொலின்க்‘‘ வகையான 35 தொடர்ச்சியாக மின்சாரம் விநியோகிக்கும் இயந்திரங்கள் 121-1-4-4-0-2103-2 ஆம் இலக்க செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) வீதிகளை காபட் செய்வதற்காக அரசாங்க கட்டிட அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு 2012 யூலை 23 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 76,432,929 பெறுமதியான முற்பணத்தினை தீர்ப்பதற்கு 2012 திசெம்பர் 31 இல் உரிய விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாதிருக்கையில் அத்தொகை செலவினமாக 105-2-3-17-2502-1 செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(iii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது மற்றும் நிதிப்பிரமாணம் 237(ஆ) பிரகாரம் பொருட்கள் கிடைத்தமை குறித்து களஞ்சியச் சான்றிதழை கொடுப்பனவு உறுதிச் சிட்டையுடன் இணைக்காது 04 சந்தர்ப்பங்களில் ரூபா 437,175 பெறுமதியான பொருட்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன் அங்கீகாரமின்றி

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) ''திவி நெகும'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த கொள்வனவுகள் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கொள்வனவு வகை | அளவு | பெறுமதி | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|---|---|
| | | ரூபா | |
| தேனீ பெட்டிகள் | 580 | 580,000 | கொள்வனவுச் சபையின் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் இல்லாமை. நி.பி. 237 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காமை. பணம் கிடைத்தமைக்கு பற்றுச் சீட்டு காணப்படாமை விநியோகம் தொடர்பில் பதிவேடு இல்லாமை. |
| உபகரணங்கள் | 81 | 451,415 | |
| பயறு விதைகள் (அளவு குறிப்பிடப் படாதவை) | | 227,520 | |
| பயறு விதைகள் (கி.கி) | 265 | | |
| சோளம் (கி.கி) | 170 | 86,860 | |
| சுண்டக்காய் கன்றுகள் | 200 | 54,000 | |
| புகைப்படக் கருவி | 1 | 38,500 | |
| தென்னங் கன்றுகள் | 10650 | | நி.பி. 237 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காமை. விநியோகம் தொடர்பில் பதிவேடு இல்லாமை. |
| வீட்டுத்தோட்டக் கருவிகள் | 13350 | | |
| கெஸட் இயந்திரம் | 1 | 2,800 | பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் காணப்படுதல் |
| இணையதள ''டோங்கல்'' | 1 | 2,100 | தொடர்பு துண்டிக்கப்பட்டிருத்தல் |
| மொபிடல் சிம் கார்ட் | 1 | 2,158 | |
| சிறுவர் பூங்கா உபகரணங்கள் | 5 | 103,950 | மெரிகோ ரவுன்ட் விளையாட்டு உபகரணங்கள், சிறுவர் பூங்காவிலும் அலுவலக வளவிலும் காணப்படாமை மற்றும் ரூபா 78,750 ஆன எஞ்சிய உபகரணங்களை விநியோகிக்காது அலுவலக வளவில் வைத்திருத்தல் |
| மேசை நாற்காலிகள் | 12 | 27,050 | விநியோகிக்காது அலுவலக வளவில் வைத்திருத்தல் |

(v) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் ஓர் கிராமத்திற்கு ஒரு வேலை செயற்திட்டத்திற்காக உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்ட வேலைகள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| வேலை | உடன்படிக்கைத் தொகை | முற்பணத் தொகை | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| பிடவெல மஹமக வீதியை கொங்ரீட் செய்தல் | 980,000 | 196,000 | 2012 மே 12 ஆந் திகதி முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் 2012 யூலை 27 ஆந் திகதி அளவில் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும், 2012 செப்தெம்பர் 19 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போதும் வீதியின் தொடக்கத்தில் காணப்பட்ட மதகுக்காக அஸ்திவாரம் மாத்திரம் இடப்பட்டிருந்ததுடன் அதற்காக கால நீடிப்பும் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| பல்லேகலதெனிய வீதிக்கு கொங்ரீட் இட்டு அபிவிருத்தி செய்தல் | 980,000 | - | (I) 166 மற்றும் 198 அடிகள் தொலைவில் அமைந்துள்ள 2 இடங்களின் நடுப்பகுதியை உடைத்துப் பார்த்ததில் கொங்ரீட் கலவை உரிய நியமத்தில் காணப்படவில்லை.<br>(II) வேலை இல. 3 இன் பிரகாரம் 54.56 சதுர அடி பொலிதீன் விரிப்பதற்கு மதிப்பிடப் பட்டிருந்த போதிலும் 39.36 சதுர அடிகள் மாத்திரம் விரிக்கப்பட்டிருந்தது.<br>(III) வேலை இல. 8 இன் பிரகாரம் ரூபா 6,000 செலுத்தப்பட்டிருப்பினும், பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) வருமானக் கணக்குகள்**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

மாவட்ட செயலகத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது 08 வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 17,796,481 தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 27,930,603 தொகையான

வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 157 சதவீதமான வருமானமாக இருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 104 சதவீதத்திற்கும் 63504 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | (குறைத்து சேகரித்தல்)/ அதிகரித்துச் சேகரித்தல் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| 1003.07.99 | 5,545,000 | 7,055,012 | 1,510,012 | 127 |
| 20.02.01.01 | 1,108,000 | 1,306,788 | 198,788 | 118 |
| 20.02.002.99 | 5,714,182 | 6,350,703 | 636,521 | 111 |
| 20.03.02.99 | 613,000 | 904,660 | 291,660 | 148 |
| 20.03.03.00 | 345,000 | 1,295,344 | 950,344 | 375 |
| 20.03.99.00 | 4,255,000 | 4,421,605 | 166,605 | 104 |
| 20.06.02.00 | 10,000 | 6,350,430 | 6,340,430 | 63504 |
| 1003.07.05 | 206,300 | 246,060 | 39,760 | 119 |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள்**

27901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 50,000,000 | 25,050,444 | 30,000,000 | 33,385,601 | 170,000,000 | 130,589,609 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பல வருடங்களுக்கு முன்னர் மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 82,992 மொத்தமான கடன் மீதிகள் மீளாய்வாண்டிலேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) பல வருடங்களாக சேவையை விட்டுச்சென்ற மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 65,643 மொத்தமான கடன் மீதிகளை குறித்த தரப்பினகளிடமிருந்து அல்லது பிணைதாரர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதவழிப்பதற்கு மீளாய்வாண்டிலேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஏனைய கடன்பட்டோரின் கீழ் 1999 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் சமுர்த்தி உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 9,500 நிலுவைக் கடன் மீதியை குறித்த தரப்பினகளிடமிருந்து அல்லது பிணைதாரர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதவழித்து மீதியினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இடமாற்றம் பெற்று வந்திருந்த 4 உத்தியோகத்தர்களின் ரூபா 410,181 மொத்தமான மீதி மற்றும் 1993 ஆம் ஆண்டு முதல் 2001 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வரகாபொல பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 13 உத்தியோகத்தர்களிற்குரிய ரூபா 330,608 கடன் மீதி என்பவற்றை 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(v) கேகாலை டாவட்டச் செயலகத்தில் பணியாற்றிய இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 96,534 கடன் மீதி மிகையாக அறவிடப்பட்டிருந்தது. அது மாவட்டச் செயலகத்தின் தனிப்பட்டோர் மீதி வகைப்படுத்தல் பொழிப்பில் மிகையான அறவிடலின் கீழ்க் காட்டப்பட்டிருக்கவில்லை.

(vi) மாவட்டச் செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களால் மேற்குறிப்பிட்ட முற்பணக் கணக்கின் ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லைகளிற்காக நிதிப்பிரமாணம் 503(1) மற்றும் நிதிப்பிரமாணம் 503(1)(உ) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட வரவு/செலவு எல்லைகளுடன் தொடர்புபடாத ரூபா 6,076,440 வரவு வைத்தல்கள் மற்றும் ரூபா 5,603,485 செலவு வைத்தல்கள் தொடர்பான விபரமான

தகவல்கள் கணக்காய்விற்குச் சமாப்பிக்கப்பட்டிருக்காமையால் அதன் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை.

**(ஈ) கட்டுநிதிக் கணக்குகள்**

மாவட்ட செயலகத்தில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 35,567,072 தொகையான வரவு மீதி காணப்பட்டது. 2012 யூலை 23 ஆந் திகதி முதல் நிலவிவரும் அம்மீதி 2013 ஏப்ரல் 30 வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பொதுவைப்புக் கணக்குகள்**

தெரணியகல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விகாரையொன்றில் வாசகம் செய்து மரணித்திருந்த மதகுருவிற்குச் சொந்தமான வங்கிப்புத்தகம் மற்றும் நிலையான வைப்புச் சான்றிதழ் என்பன பௌத்த அலுவல்கள் தொடர்பான ஆணையாளருக்கும் ஆவணங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் விகாரையின் தர்மகர்த்தாவிற்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அம்மத குருவிற்கு உரித்தாகக் காணப்பட்ட ரூபா 79,198 பணத் தொகை தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தீர்மானிக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டது.

## 1.6 நல்லாளுகை மற்றும் கணக்களிப்பொறுப்பு

**வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 மார்ச் 29 ஆந் திகதியன்றே தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலம் |
|---|---|---|
| முச்சக்கர வண்டி | 01 | - |

## 1.8 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) தாபனவிதிக் கோவை | | |
| XIX ஆம் அத்தியாயத்தின் 5.4.1 மற்றும் 5.7 ஆம் உப பிரிவுகள் | - | கேகாலை மாவட்டச் செயலகத்தின் கணக்காளர் பதிவிக்குரிய உத்தியோகபூர்வ வதிவிடத்திற்காக 2012 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2013 ஜனவரி 30 ஆந் திகதி வரை கணக்காளர் மற்றும் அவரின் மனைவியிடமிருந்து வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதி வரை அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| XIX ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் உப பிரிவு | - | கேகாலை நாகொல்ல வீதியில் அமைந்துள்ள 40 ஆம் இலக்க அரசாங்க விடுதி வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் முன்னைய கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் 2013 பெப்ரவரி வரை அவ்விடுதி மாவட்டச் செயலகத்திற்கு திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப்பிரமாணம்

| | | |
|---|---|---|
| நி.பி 264 | 198,847 | ஒவ்வொரு கொடுப்பனவு உறுதிச்சிட்டைகளிலும் குறிப்பிட்ட பணத்தொகை கிடைத்தமை குறித்து பெறுவோனிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டுக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், தெஹியோவிட பிரதேச செயலகத்தின் ரூபா 198,847 ஆன 2 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் உறுதிச் சீட்டுக்களுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 385 | 27,529 | ரூபா 500 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை செலுத்துகையில் காசோலையொன்றின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 8/83 ஆம் இலக்க உறுதிச் சிட்டையால் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனத்தை சேர்விஸ் செய்வதற்காக ரூபா 27,529 தொகை பிரதேச செயலாளரினால் தனிப்பட்ட முறையில் செலவிடப்பட்டு பின்னர் மீள்நிரப்பல் செய்யப்பட்டிருந்தது. |
| நி.பி. 1641 | - | மாவட்டச் செயலகத்திற்குரிய பயன்பாட்டிலுள்ள 13 வாகனங்கள் தொடர்பில் வாகனங்கள் புறப்படும் மற்றும் வருகைதரும் நேரங்களைக் காட்டும் வகையில் பாதுகாப்புப் பிரிவினால் வாயில் பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 1646 | - | கேகாலை மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள 5 பிரதேச செயலகங்களினால் நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்தப் பொழிப்புகள் முறைப்படி கணக்காய்விற்காக அனுப்பிவைக்கப் பட்டிருக்கவில்லை. அதில் ஒரு பகுதி ஓராண்டிற்கும் மேலாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வாகனங்க ளைப் பயன்படுத்திய உத்தியோகத்தர்களின் கையொப்பங்கள் காணப்படாமை, மீற்றர் மானியில் இறுதி மற்றும் ஆரம்ப பயணத்தூர அளவுகள் இணங்காமை என்பன அவதானிக்கப்பட்டன. |

(இ) அரசாங்க நிருவாக சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க சுற்றுநிருபம் | - | மாதாந்த போக்குவரத்துப் படியினைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்களிற்கு அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு எவ்வித |

உரித்தும் இல்லையெனக் குறிப்பிடப்பட்டிருப்பினும், போக்குவரத்துப் படியைப் பெற்றுக்கொண்ட கேகாலை மாவட்டச் செயலகத்தின் பிரதான கணக்காளர் மீளாய்வாண்டில் 747 கி.மீ. பயணம் செய்வதற்கு அரசாங்க குழாம் வாகனத்தை பயன்படுத்தியிருந்தார்.

## 1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

### (அ) செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் தாமதங்கள்

கேகாலை மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கெவிலிபிடிய சந்தி முதல் பரபிடிய வரை நீர்க்குழாய்களைப் பொருத்துவதற்கு 2012 செப்தெம்பர் 17 ஆந் திகதி அரணாயாக்க பிரதேச செயலகத்திற்கும் சமகி கமத்தொழலில் சங்கத்திற்குமிடையே வேலையை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடனபடிக்கையின் படி 01 மாதத்தில் வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2012 நொவம்பர் 28 ஆந் திகதி வரை அவ்வேலைகள் முடிவுறுத்தப்படாதிருந்ததுடன், அதற்காக காலநீடிப்பு விடுக்கப்படவில்லை.

(ii) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஹெட்டிமுல்ல புதிய கனிஷ்ட வித்தியாலயத்தில் கணனி ஆய்வுகூடத்தினை நிர்மாணித்தல் வேலைக்காக ரூபா 382,188 தொகையான முதலாம் பகுதிக்கான கொடுப்பனவு அறிக்கையின் 12 ஆம் விடய இலக்கத்தின் படி லின்டலை நிர்மாணிப்பதற்காக ரூபா 13,374 செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 சனவரி 18 ஆந் திகதி வரை அது நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் கொடுப்பனவு அறிக்கையின் 09 ஆம் இலக்கத்தின் படி 12 தூண்களை கொங்ரீட் செய்வதற்காக ரூபா 28,162 செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரை 09 தூண்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் 03 கொங்ரீட் தூண்களிற்காக ரூபா 7,040 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றங்கள் இல்லாத செயற்திட்டங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 11,412 சதுர அடிகள் கொண்ட கேகாலை மாவட்டச் செயலகத்தின் புதிய அலுவலகக் கட்டிடத்தை ரூபா 294,982,342 தொகைக்கு நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 2013 யூன் 13 ஆந் திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலைக்காக ரூபா 92,126,334 செலவிடப்பட்டிருந்தது. அவ்வேலைகள் 2013 மே 10 ஆந் திகதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தும், ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணங்களின்றி உடன்படிக்கையின் செல்லுபடியாகும் காலம் 2013 நொவம்பர் 10 ஆந் திகதி வரை 06 மாதங்களிற்கு காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதனோடிணைந்ததாக ரூபா 13,397,867 செயலாற்றல் முறி மற்றும் ரூபா 272,957,342 ஆன சகல ஆபத்துகளுக்குமான காப்புறுதியின் செல்லுபடியாகும் காலம் 2014 நொவம்பர் 10 ஆந் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுத் திகதியான 2013 யூன் 13 ஆந் திகதி வரை ரூபா 26,000,097 அல்லது அண்ணளவாக 8.8% அளவான நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய வேலைகளை 2013 நொவம்பர் 10 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு இலக்கிடப்பட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தெரணியகல பிரதேச செயலகப் பிரிவில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3 தொங்கு பாலங்களை பகுதியளவில் நிர்மாணிப்பதற்காக ரூபா 484,856 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பாலங்கள் முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டிருக்காமையால் செலவிடப்பட்ட தொகை பயனற்றதாக காணப்பட்டது.

(iii) 2012 இன் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012 நொவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 282,550 பெறுமதியான பொருட்கள் 2013 பெப்ரவரி வரை நலனாளிகளிற்கு வழங்கப்படாது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

**(உ) பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காமல் பணத்தினை விடுவித்தல்**

நி.பி. 137(5), 138(4) மற்றும் 237(ஆ) இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அங்கீகரித்து, சான்றுறுதிப்படுத்துவதற்கு முன்னர் களஞ்சியத்திற்கு பொருட்கள் கிடைத்துள்ளமை மற்றும் குறித்த பொருட்கள் பொருட் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளமை தொடர்பில் சான்றிதழொன்று இணைக்கப்பட வேண்டிய போதிலும், கேகாலை பிரதேச செயலகத்தினால் களஞ்சியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 108,303 பெறுமதியான உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு/ சான்றுறுதிப்படுத்தப்பட்டு காசோலை வரையப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 சனவரி 18 ஆந் திகதி வரை உரிய பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

**(ஊ) ஏனைய பலவீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பின்வரும் செயற்திட்டங்களிற்காக முற்பணங்கள் செலுத்தப்பட்டு உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2012 ஒக்தோபர் 04 ஆந் திகதி வரை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | உடன்படிக்கை தொகை | வழங்கப் பட்ட முற்பணம் | முற்பணம் வழங்கப்பட்ட திகதி | உடன்படிக் கைத் திகதி | முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | | |
| இங்கிரியாவத்த குடியிருப்பு வீதிக்கு கொங்ரீட் செய்தல் | 962,636 | 192,500 | 2012.09.28 | 2012.09.24 | 2012.09.30 |
| படஹேன்கந்த கீழ் வடவல விதிக்கு கொங்ரீட் செய்தல் | 960,035 | 192,000 | 2012.07.05 | 2012.06.25 | 2012.09.25 |

(ii) ஸ்ரீ ஜயவர்தனாராமய, பெமினிவத்த, மாவனெல்ல நீர்க்குழாய் விஸ்தரித்தல் செயற்திட்டத்திற்காக தேசிய நீர் வழங்கல்

வடிகாலமைப்புச் சபையால் ரூபா 979,210 மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அந்த மதிப்பீட்டில் நீர்க்குழாய்களை பொருத்துவதற்காக குழிகள் வெட்டி அவற்றை மீண்டும் மூடுவதற்கான ஊழிய பங்களிப்பின் கீழ் ரூபா 113,750 உள்ளடக்கப்பட்டு அக்கருமங்கள் ஊழிய பங்களிப்புடன் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய மொத்தத் தொகையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்தப்பட்டிருந் தமையால் ரூபா 113,750 செய்யப்படாத வேலைகளிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் பழக் கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக 2012 யூன் 05 ஆந் திகதி கொள்வனவுச் சபை தீர்மானித்திருந்த அளவிற்கும் மிகையாக ரூபா 925,535 பெறுமதியான 6038 பழக் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் தெரிவுசெய்யப்பட்டிருந்த ஒரு நாற்று மேடையிலிருந்து பழ நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த விலைகளிலும் குறைவான விலையில் பிந்திய சந்தர்ப்பங்களில் வேறொரு நிகழ்ச்சித்திட்டத்திற்காக பழக் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவ்விலைகளை ஒப்பீடு செய்ததில் திவிநெகும வேலைத்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த பழக் கன்றுகளிற்காக ரூபா 208,340 மிகையாக அறவிடப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்டிருந்த பழக் கன்றுகளில் ரூபா 27,820 பெறுமதியான பழக் கன்றுகள் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2013 சனவரி 18 ஆந் திகதி வரை நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாதிருந்துடன், அக்கன்றுகள் பௌதீக பரிசோதனைக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.10 செயலாற்றல்

### போதியளவில் அடையப்படாத பிரதான கருமங்கள்

அவசர இடர் வேளைகளில் பொதுமக்களுக்கு நிவாரணமளித்தல் மற்றும் இடருக்குற்பட்ட பிரதேசங்களை பழைய நிலைக்கு கொண்டுவருதல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நோக்கங்களில் ஒன்றான போதிலும், 2011 மே முதல் 2012 மார்ச் வரையான காலத்தில் வெள்ளப்பெருக்கு, சூறாவளி மற்றும் இடிமின்னல் போன்ற ஆபத்தான நிலைமைகளில் சேதத்துக்குள்ளான 61 வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,546,000 தொகைக்கு தேவையான ஏற்பாட்டினை செய்துகொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2012 நொவம்பர் 15 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.11 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பிரதேச செயலகம் மேற்கொண்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) கொள்வனவுச் சபையின் அங்கீகாரமின்றி ரூபா 30,340 செலவுசெய்து 8 எழுதுவினைஞர் நாற்காலிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) தெஹிஓவிட பிரதேச செயலகத்தினால் திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் நலனாளிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்குத் தேவையான பழக்கன்றுகளை ஹதபிம அதிகாரசபையிடமிருந்து கொள்வனவு செய்யாது வேறொரு தனியார் நாற்று மேடையிலிருந்து கொள்வனவு செய்திருந்தமையால் ரூபா 811,350 தொகையை மேலதிகமாக செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) போக்குவரத்துக் கட்டணம் மற்றும் தொழிலாளர் கூலிகளிற்காக குறித்த சேவை வழங்குனரிற்கு காசோலை மூலம் கொடுப்பனவு செய்யக்கூடிய வாய்ப்பிருந்தும் நிதிப்பிரமாணங்களிற்கு முரணாக தெங்கு, மிளகு மற்றும் பழக் கன்றுகளை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிற்கு எடுத்துச்சென்று விநியோகித்தமைக்காக வரகாபொல பிரதேச செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) இனால் தனது சொந்தப் பணத்திலிருந்து ரூபா 110,100 போக்குவரத்து மற்றும் தொழிலாளர் கூலியாக செலவிட்டு பின்னர் அத்தொகை மீள்நிரப்பப்பட்டிருந்தது.

(ஈ) வரகாபொல பிரதேச செயலகப் பிரிவில் வாழ்வாதார அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த சுழற்சி நிதியத்தினை அமுல்படுத்துவது தொடர்பில் 2012 ஒக்தோபர் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் வத்தெனிய சமுர்த்தி வங்கியால் 22 நலனாளிகளுக்கு 10 தவணைக் கட்டணங்களில் அறவிடுவதற்காக 2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 201,837 தொகை சுழற்சி நிதியில் ரூபா 188,237 மொத்தமான தொகை அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 1.12 நட்டங்களும் சேதங்களும்

கணக்காய்வுத் திகதியான 2012 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை காப்புறதியில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 110,050 நட்டத்தை சாரதியிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.13 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்பாத எகொடமுல்ல சனசமூக மண்டபத்தின் அருகில் மதகினை நிர்மாணித்து மண் நிரப்புவதற்காக 2011 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 106,310 செலுத்தியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2012 ஒக்தோபர் 03 ஆந் திகதி வரை அக்காணியின் உரித்து அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிர்மாண வேலைகள் கோவைகளின் பரிசோதனையில் முறையே 2011 நொவம்பர் 30 மற்றும் 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதிகளில் வேலை முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த உடன்படிக்கைப் பெறுமதிகள் முறையே ரூபா 195,084 மற்றும் ரூபா 962,636 ஆன அமனாவல மாஹங்கல வீதி மற்றும் இங்கிரியாவத்த குடியிருப்பு வீதியை கொங்கீட் செய்வதற்கான உடன்படிக்கைகள் முறையே 2011 நொவம்பர் 21 மற்றும் 2012 செப்தெம்பர் 24 ஆந் திகதிகளில் கைச்சாத்திட்டிருந்தமை காரணமாக அந்த நிர்மாண வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(இ) 1935 ஆம் ஆண்டில் ஊழியர் வதிவிடங்களை நிர்மாணிப்பதற்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டிருந்த கேகாலை நாகொல்ல வீதியில் அமைந்துள்ள 06 ஏக்கர் 03 ரூட் 01 பேர்ச் காணியில் 1957 ஆம் ஆண்டு முதல் 15 அத்துமீறிய குடியிருப்பாளர்களும் உத்தரவுப்பத்திரக் குடும்பங்களும் நிரந்த வீடுகளை நிர்மாணித்து காணியில் வசித்து வருவதுடன், 2012 ஆகஸ்ட் வரை மேற்படி காணியிலிருந்து அத்துமீறிய குடியிருப்பாளர்கள் மற்றும் உத்தரவுப்பத்திர குடும்பங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 1.14 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 41 | 37 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 21 | 09 |
| (iii) | இரண்டாம் நிலை | 920 | 743 | 177 |
| (iv) | ஆரம்ப நிலை | 106 | 95 | 11 |
| | மொத்தம் | 1097 | 896 | 201 |

### (ஆ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளுடன் இணங்காமை

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2011 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய HAF-3-ADMIN-CMA-015 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 2010 செப்தெம்பர் 29 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு முரணாக பிரதேச செயலாளரினால் 24 பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 2006 ஆம் ஆண்டு முதல் 2011 கணக்காய்வுத் திகதி வரை படியாக ரூபா 1,406,828 செலுத்தப்பட்டிருந்தது.